செ.வெ.எண்: 75 நாள்: 28.02.2017

# புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மை செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் திரு.பி.அண்ணாமலை,இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகை வழங்கும் வகையிலும், வறட்சி காலங்களில் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வசதி ஏற்படுத்தும் நோக்கிலும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மை செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் திரு.பி.அண்ணாமலை,இ.ஆ.ப., அவர்கள் இன்று (28.02.2017) புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார்.

சாந்தநாதபுரம் 2ம் வீதியில் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்த குடிநீர் தொட்டியில் போதுமான அளவு குடிநீர் தங்கு தடையின்றி வருகிறதா என்று பொதுமக்களிடம் கேட்டறிந்தார். தொடர்ந்து சிறைச்சாலை மரக்கடைவீதி மற்றும் புதுஅரண்மனை வீதியில் ஆய்வு மேற்கொண்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் நிலத்தடி நீரின் அளவு, பழுதடைந்த ஆழ்துளை கிணற்றை சீரமைப்பது, வீடுகளில் சேகரித்து வைத்திருக்கும் குடிநீர் சுகாதாரமாக பாதுகாக்கப்படுகிறதா என்பது குறித்தும் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பொதுமக்களிடம் கேட்டறிந்தார்.

மேலும் தெற்கு சந்தைப்பேட்டையில் அமைந்துள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய கட்டிடத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் பழுதடைந்துள்ள குடிநீர் குழாய்களை உடனடியாக சரிசெய்வதோடு சாக்கடைகளில் தேங்கியுள்ள குப்பைகளை அப்புறப்படுத்தி, முழுசுகாதாரத்துடன் பராமரித்திட வேண்டும் என்று நகராட்சி அலுவலர்களுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மை செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார் (மா.ஊ.மு), நகராட்சி ஆணையர் (பொ) திரு.ஜீவாசுப்பிரமணியன், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (பொ) திரு.முருகண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**